1981 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் பிரிவு 18 இற்கு அமைய நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் அறிக்கை -2017

அறிமுகம்

முன்னைய காலங்களில் நாடு அதிகாரவர்க்கத்தின் ஆட்சிக்கு உட்பட்டுவந்துள்ளது. குடியாட்சி ஒழுங்குகள் மற்றும் பாராளுமன்ற செயற்பாடுகள் மூலமாக மக்களே பொறுப்பேற்கும் மக்களாட்சி நாடாக தற்போது உருவாகியுள்ளது. உயர்மட்ட நிலையில் உள்ள அதிகாரிகளாகிய நீங்களே பொதுமக்களின் சேவர்களாக நண்பர்களாக கௌரவம், நேர்மை, நீதி, மற்றும் சமத்துவம் என்பவற்றை உயர் நிலையில் பேணுவதாக மக்களை உணரவைத்தல் வேண்டும். (1948 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் திகதி சிற்றகொங்கில் குவயிட் ஈ அசாம் என்பவரால் உயர்மட்ட நிலையில் உள்ள அலுவலர்களுக்கு ஆற்றப்பட்ட உரை).

பெரும்பாலான நிறுவனங்களாலும் கல்விமான்களாலும் ஆரம்பத்தில் அழைக்கப்பட்டதும் தற்போது அழைக்கப்படுகிறதுமான ஒம்புட்ஸ்மனின் வரலாறானது பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பித்துள்ளது. 1809 ஆம் ஆண்டில் சுவீடின் பாராளுமன்றமானது அரசு மற்றும் உயர் தீர்மானங்களை உருவாக்கும் சுவீடன் நிறுவனத்துக்கான (Riksdag) நீதிமன்றங்களை மேற்பார்வை செய்யும் பொருட்டு ஒம்புட்ஸ்மனை நியமிப்பதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளது. இக்காலத்தில் ஒம்புட்ஸ்மன் இவ்வகையான பணிகளுக்கு அப்பாலும் பொறுப்புக்களை கொண்டுள்ளார். எவ்வாறாயினும் சுவீடனில் ஏற்பட்ட தோற்றமானது நியாயமாக பார்க்கும் போது ஒம்புட்ஸ்மனின் ஆரம்ப தளமாக மட்டுமே உள்ளது. ஒம்புஸ்மன் தாபனத்தின் பின்னுள்ள முக்கியமான கருத்தை அவதானிக்கும் போது அக்கருத்தானது பொது நிர்வாகத்தையும் தனிநபரின் முறைப்பாடுகளையும் மேற்பார்வையிடுவதற்கு அதிகாரமளித்து சுலபமாக அணுக கூடிய வகையிலும் நிறுவனமொன்றை நிறுவுவதன் மூலம் பிரசைகளுக்கு நீதியை வழங்குவதாக உள்ளது. சகலரும் அணுக கூடிய வகையிலான நிறுவனமொன்றை நிறுவுவதன் மூலம் பிரசைகளுக்கு நீதியை வழங்க முடியும். சகலரும் அணுக கூடியதான நிறுவனம் என்பதுடன் நாட்டின் பொது நிர்வாகத்தை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை கொண்டுள்ள சுதந்திரமான நிறுவனம் என்னும் எண்ணக்கருத்தை ஏறக்குறைய உலகம்பூராவும் அடையாளப்படுத்துகிறது. அத்துடன் வேறுபட்ட தேசிய சட்ட முறைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கமானது அரசசேவை உத்தியோகத்தர்கள் பொதுமக்களின் சேவகர்களாகவும் நண்பர்களாகவும் இருப்பார்கள் என்று பொதுமக்களை உணரவைத்தல் வேண்டும். சில அரசாங்க சேவை உத்தியோகத்தர்கள் பொதுமக்களின் நண்பர்களாகவோ சேவகர்களாகவோ சேவையாற்ற விரும்புவதில்லை மாறாக அவர்களை அதிகாரம் செய்ய முற்படுகிறார்கள்.

சாதாரண நபரொருவர் தனக்கு இழைக்கப்பட்ட அநீதி தனக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட துரோகமாகவும் அதற்காக பரிகாரம் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் நம்புகிறார். இவ்வநீதி தொடர்பில் நீதிமன்றத்திற்கு செல்லுதல் மிகவும் காலம் தாழ்த்தக்கூடியதுமானதும் செலவுமிக்கதுமான ஒரு செயற்பாடாகவுள்ளதுடன், தவறு செய்யும் அலுவலர் தொடர்பில் அவர்களின் உயர் அதிகாரிகளுக்கு முறையிட்டு நீதியை பெற்றுக் கொள்ளுதலும் பயனற்றது என நம்புகிறார்.

ஒம்புட்ஸ்மன் அலுவலகம் தாபிக்கப்பட்டதிலிருந்து நாம் பாதிக்கப்பட்ட இலங்கை பிரசைகளுக்கு மிகவும் விரைவாகவும் இலகுவாகவும் நீதியை வழங்கும் பொருட்டு எமது விசாரணைக்காக நீண்ட தூரம் பயனித்துள்ளோம். ஆரம்பத்தில் குறைந்தளவிலேயே தீர்வு வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டபோதும் தற்போது ஒவ்வொரு வருடமும் ஆயிர கணக்கில் இச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டு தொடர்ந்தும் அதிகரித்து செல்கிறது.

சுவீடனில் நிறுவனத்தை தோற்றிய தாபகர்கள் நிறுவனத்தின் மூலாதாரமான எண்ணக்கருவாக மனித உரிமைகளுக்கு இடம்கொடுக்கவில்லை. ஆயினும் உலகம் முழுவதும் ஒம்புட்ஸ்மன் எண்ணக்கரு நடைமுறைப்படுத்த தொடங்கிய போது பிரசைகளின் மனித உரிமைகளின் காவலனாகவும் பாதுகாவலனாகவும் ஒம்புட்ஸ்மன் இருக்க வேண்டும் என்னும் கருத்தை அடித்தளமாக கொண்டு ஆரம்பித்திருந்து. “ சிறந்த நிர்வாகமே அடிப்படை மனித உரிமையாகும்.” என சேர்த் குறிப்பிட்டுள்ளார். துர்நிர்வாகமானது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதற்கு காரணமாக இருப்பதால் நிர்வாக நடவடிக்கைகளின் மேற்பாரவையாளரான ஒம்புட்ஸ்மனின் பிரதான பணியாக மனித உரிமைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளது. கிழக்கு ஐரோப்பாவிலும் அதேபோல் மத்திய ஆசியாவிலும் பின்-பொதுவுடைமைவாதி நாடுகளில் புதிதாக தோன்றிய பல நிறுவனங்களுக்கு மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு வெளிப்படையாக பொறுப்பளிக்கப்படவில்லையாயினும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய தேசிய உயர்ஸ்தானிகம் ஒம்புட்ஸ்மனின் முக்கியமான பங்கை வலியுறுத்திருந்த போது ஆட்சியின் பலவீனமான முறையான தொழிற்பாடற்ற நிறுவனங்களை கவனிக்கும் ஒம்புட்ஸ்மனின் பணிக்கும் மற்றும் மனித உரிமை நிபந்தனைகளை நிவர்த்தி செய்வதற்கான அரசுகளின் கடமைப்பாடு என்பவற்றுக்கு இடையில் தொடர்பு இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

ஒம்புட்ஸ்மனின் பங்களிப்பு தொடர்பில் ஐக்கிய தேசிய பொது சட்ட சபை தீர்மானம் 63/169 ஆனது ஒம்புட்ஸ்மனின் பணிப்பாணை அமைப்பில் மனித உரிமைகள் நியமங்கள், சட்டத்தின் விதி மற்றும் நீதி கொள்கைகள் மற்றும் நியமங்களாகவுள்ள சமத்துவம் என்பன பிரதிபலிக்கப்பட வேண்டும். அத்துடன் அவர்கள் பணியில் இந்நியமங்களை இணைப்பதற்கு அனுமதித்தல் வேண்டும் என குறித்துரைக்கிறது. பலனுள்ள நிவாரணம் நீதியை அணுகுதல் நீதிமன்றத்தை அணுகுதல் நியாயமான விளக்கம் குறை தீர்வு சட்டரீதியான பாதுகாப்பு சரியான செயற்பாடு சட்ட உறுதித்தன்மை தேவையற்ற தாமதம் நியாயமான நேரம் அத்துடன் பாகுபாடின்மை உள்ளடங்கலாக நீதியை அணுகுவது என்பது நியமங்களின் ஒரு பகுதியாகவுள்ளது. இத்தீர்மானமானது ஒம்புட்ஸ்மனின் சுயாட்சி மற்றும் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை கோடிட்டு காட்டுவதுடன் இந்நிறுவனங்கள் சர்வதேச மனித உரிமைகளை கடப்பாடுகளுக்கு சமமாக தேசிய சட்ட உருவாக்கம் மற்றும் தேசிய நடைமுறைகளை கொண்டு வருதல் தொடர்பில் அரசாங்கத்திற்கு அறிவுரை வழங்கி முன்செயற்பாடாக பங்களிப்பு வழங்க முடியும் என வலியுறுத்துகிறது.

ஒம்புட்ஸ்மன் பங்களிப்பு தொடர்பில் ஐக்கிய தேசிய பொது சட்ட சபை தீர்மானம் 65/207 ஆனது சர்வதேச ஒம்புட்ஸ்மனினால் மனநிறைவுடன் செய்யப்பட்ட பணிகளை கொண்ட தீர்மானம் 63/169 இல் ஏற்கனவே உருவாக்கப்பட்ட கூற்றுக்களை மீண்டும் அறிவுறுத்துவதன் மூலம் ஒம்புட்ஸ்மனின் சுதந்திரம் மற்றும் தன்னியக்க வலுவை கருத்தில் கொள்ளும் வகையில் அரசாங்கங்களை தைரியப்படுத்தி அத்துடன் பாரிஸ் கொள்கைகளுக்கு அமைவாக பொருத்தமாக இயங்குவதற்கு ஒம்புட்ஸ்மனை ஊக்கமளிக்கிறது.

இத்தீர்மானம் மேலும் பொது நிர்வாகத்தில் நல்லாட்சியை மேம்படுத்துவது ஒம்புட்ஸ்மனின் முக்கிய பங்கு என குறித்துரைக்கிறது. "நல்லாட்சி" என்பது வெளிப்படை நியாயம் மற்றும் பிரதிநிதித்துவம் வாய்ந்த தீர்மானம் எடுக்கும் செயற்பாடு அத்துடன் எவ்வாறு நிர்வாகத்தினால் இத்தீர்மானங்கள் அமுல்படுத்தப்படுகின்றன போன்ற சகலதும் உள்ளடங்கியவையே என விளங்கி கொள்ளலாம். இத்தீர்மானங்களை அமுல்படுத்தலை கண்காணிப்பதற்கு ஒம்புட்ஸ்மன் நிறுவனங்கள் முக்கியமாகும்.

மேலும் அரசாங்கம் மற்றும் அதை ஆட்சி செய்பவர்களுக்கிடையிலான அதிகார சமமின்மையை இயல்பாக கொண்டுள்ள மரபுரீதியான நீதிமன்ற முறைமைகளின் எல்லைகளை வெற்றி கொள்வதற்கு ஒம்புட்ஸ்மன் நிறுவனங்கள் உதவுகின்றன. எவ்வாறாயினும் மரபுரீதியான நீதிமன்ற முறைமையானது சட்டமைப்பு ரீதியான பிரச்சனைகளை முழுமையாக சிந்திக்க முடியாது. நீதிமன்றத்தை அல்லது நியாய சபையை அணுகுதல் பலன் அளிக்குமா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. அத்துடன் குறைதீர்வை பெற்றுக்கொள்வதற்கு பல மேற்கோள்கள் கோரப்படுகின்றன. கால அளவு அதிகளவில் செலவழிக்கப்படுகிறது. சிறந்த சட்ட உதவி முறை மூலம் இவ் அம்சங்களை முழுமையாக நீக்க முடியாதுள்ளது. இன்னொருமுறையில் கூறுவதானால் அரசாங்கத்திடம் பெருமளவில் பணம் உண்டு அத்துடன் அரசுக்கு நேரமும் பிரச்சனையான விடயமல்ல. மேலும் ஒம்புட்ஸ்மன் கடந்த ஆண்டுகளில் பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், முறையாக பிரச்சனைகளை சுட்டிக்காட்டுவதற்கு அதிகாரம் உள்ளதாலும், நிர்வாக குறைபாடுகளை கவனத்தில் கொள்வதிலும் நீதிமன்றத்தை விட ஒம்புட்ஸ்மன் நிறுவனம் சிறந்ததாகவுள்ளது. ஒம்புட்ஸ்மன் நிறுவனம் பொதுவாக அணுகு வழி முறைகள் குறைந்தளவில் கொண்டிருப்பதாலும் விசேடமாக பலவீனமாக வகுதியினருக்காக அமைக்கப்பட்டதாலும் பரிகாரத்தை நாடுவதற்கு அவர்களுடைய இயல்தகவை வலுவூட்டுவதற்கு உதவுவதாலும் மரபுரீதியான நீதிமன்ற முறைமையை விட ஒம்புட்ஸ்மன் நிறுவனம் நன்மைகளை கொண்டுள்ளது.

1966 ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற சட்ட நிபுணர்களின் தென்கிழக்கு ஆசிய மகாநாட்டில் இலங்கையில் ஒம்புட்ஸ்மன் அலுவலகத்திற்கான தேவை முதன்முதலாக விவாதிக்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் 156 ஆவது உறுப்புரையானது நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தை (ஒம்புட்ஸ்மன்) தாபிப்பதற்கு பாராளுமன்றம் அதிகாரபூர்வமாக உத்தரவிட்டது. பாராளுமன்றமானது 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தை உருவாக்கி அலுவலகத்தை தாபித்து அதன் அதிகாரங்களையும் கடமைகளையும் செயற்பாடுகளையும் வரையறுத்தது. அதனை தொடர்ந்து 1994 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க மூலச்சட்டத்தின் பிரிவு 10 நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (திருத்திய) சட்டமானது பொதுமக்களிடமிருந்து நேரடியாக கிடைக்கப்பெறும் அடிப்படை உரிமை மீறல்கள் அல்லது ஏனைய தீங்கிழைப்புக்கள் தொடர்பான எழுத்து மூல முறைப்பாடுகள் அல்லது சார்த்துரைகள் சார்பாக நடவடிக்கையை எடுப்பதற்கு இயலக்கூடியதாக இருப்பதுடன் ஒம்புட்ஸ்மனால் எடுக்கப்படும் நடவடிக்கையை பொது மனுக்கள் குழுவிற்கு தெரியப்படுத்துகிறது.

ஒம்புட்ஸ்மன் முறைமையானது பிரசைகள் தமது துன்பத்தை தீர்த்து தமது அடிப்படை உரிமைகளை பாதுகாத்து அவர்களுடைய கௌரவத்தை மீட்டெடுத்து சனநாயக அமைப்பில் நம்பிக்கை ஏற்படும் வகையில் சுதந்திரமாகவும் பக்கசார்பற்றும் செலவின்றியும் பிணக்குகளுக்கு தீர்வு காணும் பொறிமுறை ஒன்றை அணுகக்கூடிய வகையில் நீதிமன்றம் ஒன்றை வழங்குகின்றது.

பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப்பட்டுள்ளவாறான சட்டங்களுக்கு அமைய செயல்படும் திணைக்களம் அல்லது அரசாங்கம் அல்லது கூட்டுத்தாபனம் அல்லது ஏனைய சபை போன்ற நியதிச் சட்ட அதிகாரசபை ஒன்றில் முக்கியமாகவுள்ள விடயங்களுடன் தொடர்புபட்டு தாக்கல் செய்யப்பட்ட பல முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு தாபிக்கப்பட்டன. இம்முறைப்பாடுகள் அநேகமாக தாபன விதிக்கோவையில் துணைச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குகளாக உள்ளடக்கப்பட்டிருந்தும் அத்தகைய சட்டங்கள் ஒழுங்குகளும் அமைய செயல்படத்தவறியதால் எழுந்துள்ளன. சிலவேளைகளில் ஒழுங்குகளும் விதிமுறைகளும் அவதானிக்கப்படுவதற்கு உபயோகிக்கப்பட்ட நடைமுறைகள் கைநூல்களில் விபரிக்கப்பட்டிருந்தும் அவை பின்பற்றபடுவதில்லை.

முறைப்பாட்டாளரால் கொண்டுவரப்பட்ட மனக்குறைகள், அரசாங்கக்கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பாகுபாடின்றி நேர்மையான அமுல்படுத்தலில் நிர்வாகிகளும் அதிகாரிகளும் கவனக்குறைவாக இருந்தமையினால் ஏற்பட்டவையாகும். மேலதிகமாக கொள்கை அல்லது நடைமுறைகள் பின்பற்றப்பட்ட போது புரிந்துகொள்ளும் தன்மையில் குறைபாடு மற்றும் நெகிழ்ச்சியற்ற கடுமையும் அவதானிக்கப்பட்டன.

அரசாங்க திணைக்களங்கள் அல்லது நியதிச் சட்ட சபைகளில் உள்ள உணர்ச்சியற்ற அதிகாரவர்க்கங்களினால் தொடர்ந்தும் எழும் முறைப்பாடுகளுக்கான காரணம் இலகுவில் தீர்க்கக் கூடியது. அத்துடன் சேவையினைப் பெறும் சேவை பெறுநரின் விசாரணைக்கோ அல்லது பாதிக்கப்பட்ட அலுவலர்களுக்கோ பதில்களை வழங்குவதில்லை. அத்துடன் தனிநபர் தொடர்பில் நற்பண்புகளைச் சரியாக பேணாது பல மனுதார்ர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளார்கள்.

அரசாங்க அலுவலர்களிடம் உள்ள கர்வத்தை நீக்குதல் அவசியமாவுள்ளது. நல்ல நிர்வாகத்தின் முக்கிய கூறாகவுள்ள திருப்பதிகரமான பொதுமக்கள் உறவுக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். அரசாங்கதுறைகளில் மிகவும் முக்கியமான கூறாகவுள்ள சிறந்த பொதுமக்கள் உறவு நன்றாக பேணப்படாதுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகவுள்ளது. நிர்வாகத்தின் மிகவும் முக்கியான ஆக்கக்கூறாகவுள்ள தகவலை சரியான நேரத்தில் வழங்கத்தவறுதலானது அலுவலர்களின் அலட்சியத்தை அல்லது சிரத்தையின்மையை குறிப்பிடுவதாகவுள்ளது.

முறைப்பாடொன்றுக்கு எதிராக விசாரணையோ அல்லது புலனாய்வோ மேற்கொள்ளும் போதெல்லாம் அதிகாரிகள் பிரச்சனைக்குரிய நீதி, நியாயம் தொடர்பில் கவனம் செலுத்தாது வெறுமனே தீர்மானத்தையோ அல்லது செயற்பாட்டையோ மேற்கொள்வதற்கு முயற்சித்து நேரத்தை வீணடிக்கிறார்கள். அதிகாரிகள் பிரசைகளுக்கு ஏற்பட்ட தவறான செயற்பாடு மற்றும் அதன் காரணமாக ஏற்பட்ட தவறான விளைவுகள் என்பவற்றின் மீது கவனம் செலுத்தாது அதிகாரிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளில் நியாயம் இருந்தும் அவ்வகையான தவறான செயற்பாடு அல்லது பொய்யான தீர்மானங்களை திரும்பவும் எடுப்பதில் உறுதியாக உள்ளனர்.

மேலே கூறப்பட்ட பிரச்சனைகளின் மத்தியில் இவ்வலுவலகம் தனக்கு அனுப்பும் முறைப்பாடுகளின் விபரங்களை ஒழுங்குபடுத்தி நிர்வாகித்துள்ளது. அலுவலகத்தின் பதவியணிகளில் வெற்றிடம் இன்னமும் நிரப்பப்படவில்லை. அலுவலகத்தில் கணக்காளர் அல்லது கணக்குப்பதியுனர் நியமிக்கப்படவில்லை. அலுவலகத்தில் சேவை புரிவதற்கு அலுவலர்கள் தயக்கம காட்டுவது அவதானிக்கப்பட்டுள்ளது. போதியளவு மேலதிக நேர கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அல்லது அலுவலர்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஏனைய முன்தேவைகளை பெறுவதற்கும் சந்தர்ப்பமின்மையே காரணமாக இருக்கலாம்.

புள்ளிவிபரப் பகுப்பாய்வு

2017 ஆம் ஆண்டில் இவ்வலுவலகம் புலனாய்வுக்கும் அறிக்கைக்குமாகப் பாராளுமன்ற பொது மனுக்கள் குழுவினால் அனுப்பப்பெற்ற 70 முறைப்பாடுகளையும் மேலதிகமாக பொது மக்களிடமிருந்து நேரடியாக 1310 முறைப்பாடுகளையும் பெற்றுள்ளது. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் மீதமாகவுள்ள 457 முறைப்பாடுகள் முடிவுபெறுவதற்குள்ளன. எனவே இவ்வருட மீளாய்வின் கீழ் கையாள வேண்டிய மொத்த முறைபாடுகள் 1837 ஆகும்.

அம்முறைப்பாடுகளில் பெரும்பான்மையானவை விசாரணை செய்யப்பட்டு அது தொடர்பான அறிக்கைகள் குறுகிய காலப்பகுதிக்குள் பொது மனுக்கள் குழுவிற்கு சமர்பிக்கப்பட்டன. இவ்வலுவலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1197 முறைப்பாடுகள் சுருக்கமான விசாரணை மூலம் முடிவுறுத்தப்பட்டன. அத்துடன் 24 முறைப்பாடுகள் கட்சிகள் முன்னிலையில் விசாரணை மேற்கொண்ட பின்னர் முடிவுறுத்தப்பட்டன. மொத்தமாக 1221 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டன. மிகுதி 616 முறைப்பாடுகள் 2018 ஆம் ஆண்டிற்கு கொண்டு செல்லப்படுகின்றன.

முறைபாட்டாளர்கள் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துவதில் அலுவலர்கள் முறையற்ற தாமதங்களை ஏற்படுத்துமிடத்து இவ்வலுவலகமானது பல பிணக்குகளுக்கு சாத்தியமானளவு மிக விரைவாக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு அவர்களுடன் தொலைபேசி மூலமும் கடிதத்தொடர்பு மூலமும் ஏற்புடைய அரசாங்க அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பிணக்குகளைத் தீர்ப்பதற்கு பெரும்முயற்சி எடுத்துள்ளது. பலமுறைப்பாட்டாளர்கள் தமது துயர்களை நாட்டின் ஜனாதிபதி, பிரதமமந்திரி மற்றும் அமைச்சர்கள் ஆகியோருக்கு முறையீட்டை கவனத்திற்கு கொண்டுவந்துவிட்டு அதன் பிரதிகளை ஒம்புட்ஸ்மனுக்கு அனுப்புகிறார்கள். இச்செயற்பாட்டினால் பலமுகவர்கள் தமது நேரத்தையும் வளத்தையும் முறைப்பாட்டாளரெருவருக்காக விரயம் செய்கிறார்கள். சிலவேளை ஏற்புடைய அரசாங்க அலுவலர்கள் அவற்றை அமுல்படுத்துவதற்கு இயலாதளவு முரணான கட்டளைகளை வழங்குகின்றனர். ஏனைய நிறுவனங்களுக்கு தமது முறைப்பாட்டினை அனுப்பிவிட்டு இவ்வலுவலகத்திற்கு முறைப்பாட்டின் பிரதியை அனுப்புவதால் இவ்வலுவலகம் முறைப்பாட்டின் பிரதியைக் கொண்டு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளமுடியாதுள்ளது. சில முறைப்பாட்டாளர்கள் விசாரணைகளை தொடங்குவதற்கு இவ்வலுவலகத்திற்கு போதுமான தகவல்களை வழங்க தவறுகிறார்கள். உதாரணமாக குறிப்பிட்ட சேவைநிலையத்தில் இடமாற்றம் வழங்காமை அல்லது சேவை நீடிப்பு வழங்காமை என்பவற்றில் இழைக்கப்பட்ட அநீதியை அவர்கள் வாதிடும் போது இவ்வலுவலகம் விசாரணையை ஆரம்பிப்பதற்கு இடமாற்றம் பெறல் அல்லது சேவை நிலையமொன்றின் சேவைக்காலம் தொடர்பான தகவல்களைப் பெறுதல் வேண்டும். நியமனமொன்றிற்கான அவசியமான தகைமைகள் குறைவாக இருந்தும் நியமனத்தைக் கோரும் சந்தர்ப்பத்தில் முறைப்பாடு நியாயத்தை வெளிப்படுத்தாது இருக்கலாம். முறையற்ற தாமதத்தினால் நிவாரணத்தை நாடுதல் இன்னொரு நிலையாகும். இந்நிலையில் முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

அதேபோல் அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோரின் இடமாற்றங்கள், சம்பள உயர்வுகள், சம்பள நிலுவைகள், படிகள் மற்றும் ஓய்வூதியம் என்பன தொடர்பாக அதிபர்கள் ஆசிரியர்களால் மிகவும் உயர்வான எண்ணிக்கையில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. சரியான நேரத்திற்கு அதிகாரிகளிடமிருந்து அறிக்கைகள் பெற்றுக்கொள்வது மிகவும் கடினமாகவுள்ளது. பாடசாலை அனுமதிகள் தொடர்பாக பல பெற்றோர்கள் முறைப்பாடுகள் செய்துள்ளார்கள்.

எழுத்து மூல பரீட்சைகளில் போதியளவு புள்ளிகளைப் பெற்றிருந்தும் அதிபர் தர நியமனங்களை வழங்குதலில் பாகுபாடு காட்டப்பட்டதாக ஆசிரியர்களிடமிருந்து வந்த முறைப்பாடுகள் அதிகரித்து காணப்பட்டுள்ளதன.

இவ் நிறுவனத்தினால் அறிக்கை கோரப்படும் போது சில நிறுவனங்கள் அறிக்கயை விரைவில் சமர்ப்பிப்பதில்லை. மகாவலி அதிகாரசபை, சுகாதார அமைச்சு மற்றும் ஓய்வூதிய திணைக்களம் போன்ற நிறுவனங்களே மிகவும் முக்கியமான நிறுவனங்களாகவுள்ளன.

மேலே கூறப்பட்ட பிரச்சனைக்கு மேலதிகமாக மகாவலி அதிகார சபை மற்றும் ஓய்வூதிய திணைக்களம் என்பன தாம் எடுத்த தீர்மானத்தை மாற்றுவதில் பிடிவாதமாகவும் மிகவும் தயக்கமாகவும் உள்ளதை அவதானித்துள்ளேன். இந்நிறுவனங்களிடமிருந்து நிவாரணங்களை கோரும் பிரசைகள் இவ்வகையான நடத்தையால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். உதாரணமாக குறிப்பிட்ட விசாரணை தொடர்பில் நான் வலய பணிப்பளரை சமுகமளிக்குமாறு கோரியிருந்தும், மகாவிலி அதிகாரசபை காணி அலுவலரொருவரை அனுப்பியிருந்தது. அவ்வலுவலர் தலைமை அதிகாரியினுடைய அறிவுறுத்தல்களின் படி எதிர்பார்த்த நியாயமான தீர்வையும் வழங்காது இவ்வலுவலகத்தினது அரசாங்க சேவை கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் இடையூறாக இவரது நடத்தை அமைந்திருந்ததை நான் அவதானித்தேன்.

கடந்த இரண்டு வருடங்கள் வரை திறமையான பணிப்பாளர் நாயகத்தின் கீழ் இயங்கிய ஓய்வூதி0ய திணைக்களம் தமது விடயங்களை மிகவும் நல்ல முறையில் நடாத்தி சென்றது. அவர்கள் நடைமுறைப்படுத்திய சிறந்த நிர்வாகம் தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது என கூறவேண்டியுள்ளது. அத்துடன் தற்போது பெருமளவில் ஓய்வூதியம் தொடர்பான முறைப்பாடுகள் இந்நிறுவனத்திற்கு அனுப்பப்படுகின்றன. அலுவலர்கள் சட்டமுறைகளுக்கு உட்பட்டு ஒழுகுவதுடன் வெளிப்படையாகவும் செயலாற்ற வேண்டும் என்பதை நினைவூட்டுகிறேன். அத்துடன் பதவியில் அமர்த்தப்படும் அலுவலர்கள் தன்னிச்சையாக தீர்வினை எடுக்கும் நடத்தையுள்ளவராக இருத்தல் கூடாது.

சிறுவர்களை பாடசாலையில் அனுமதிப்பது தொடர்பில் பல்வேறு மாற்றங்களை அறிமுகப்படுத்திய கௌரவ கல்வி அமைச்சருக்கும் அவருடைய செயலாளருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது பாராட்டை தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் விசேடமாக அவர்களுடைய இடமாற்றம் மற்றும் பதவி உயர்வுகள் போன்ற விடயங்களில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் நியாயமான முறையில் நடாத்தபடுவார்கள் என எதிர்பார்க்கிறேன். மேலும் நீண்ட காலமாக குறிப்பிட்ட பாடசாலையில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களின் இடமாற்றத்தில் வழிகாட்டல்களை அனுசரித்தல் வேண்டும், அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துவதற்கு எவருக்கும் இடமளித்தலாகாது அத்துடன் அமைச்சின் சேவையாற்றும் சில ஊழலில் ஈடுபடும் சிரேட்ட அலுவலர்களின் செயற்பாடுகளை கௌரவ அமைச்சருக்கு மற்றும் செயலாளருக்கு அறிவிக்கலாம்.

மற்றும் சமய அடிப்படைகள் தொடர்பாக தற்போது ஒதுக்கி வைத்து ஒன்று சேர்ந்துள்ள பாடசாலைகளின் சிந்தனைகளை அவர்கள் புறக்கணிக்கிறார்கள். வேறுபட்ட பின்னணிகளிலிருந்து வரும் மாணவர்கள் சிறுவயதில் ஒன்றாக இணைவதால் அவர்களுடைய அனுபவங்கள் வேறுபட்ட இனக்குழுக்களைக் கொண்ட பிரசைகளுக்கிடையில் ஏற்படும் தவறான புரிந்துணர்வு அவநம்பிக்கை என்பன இல்லாதொழிக்கும்.

உள்ளூர் அதிகாரிகள் தமது எல்லைக்குள் சுற்றுப்புறத்தில் வாழும் குடியிருப்பாளர்களை அசௌகரியத்திற்கு உட்படுத்தும் வகையில் அதிகாரமளிக்கப்படாத நிர்மாணங்களை கட்டியெழுப்பியவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதில் மிகவும் அலட்சியமாகவுள்ளனர். நல்ல விளைவுகளை கொண்டுவராத காரணத்தினால் இந்நிர்மாணங்களை தகர்த்தி நடவடிக்கை எடுப்பதற்கு இவ்வதிகாரிகளுக்கு பல பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய மற்றும் மாகாணக் கல்வி திணைக்களங்களின் அலுவலர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் மிகவும் அதிகமாகவுள்ளன. இசுறுபாயாவில் உள்ள அமைச்சுக்கு மாகாணக் கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பப்படும் எமது கடிதங்களை உடன் கவனத்தில் கொள்ளாமையால் அறிக்கையைப் பெறுவதற்கு பல நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட வேண்டியிருந்தாலும் குறிப்பிட்ட அலுவலர்கள் விசாரணைக்கு சமுகமளிப்பதில் முன்னேற்றம் காணப்படுகிறது. அதிபர் விரும்பாத ஆசிரியர் ஒருவரை அவர் இடமாற்றம் செய்ய தீர்மானிக்கும் போதெல்லாம் குறிப்பிட்ட ஆசிரியருக்கு கால அட்டவணையைக் கொடுக்காது இடமாற்றத்தை மேற்கொள்ளும் திறமையை விசாரணைகளின் போது காண முடிந்தது.

முறைப்பாடு ஒன்று தொடர்பாக விசாரணைகள் அல்லது புலனாய்வுகள் மேற்கொள்ளும் போதெல்லாம் பிரச்சனையை நீதி அல்லது நியாய உணர்வுடன் கவனம் செலுத்தாது தீர்மானம் அல்லது செயற்பாடு ஒன்றை நிரூபிப்பதற்கு முயல்வதில் அலுவலர்கள் நேரத்தையும் பிரயத்தனத்தையும் செலவு செய்துள்ளனர். தவறான செயலுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் தனிநபர் மற்றும் பிரசைகளின் மீதான ஆரோக்கியமற்ற விளைவுகள் என்பவற்றில் சிரத்தை கொள்ளாது அலுவலர்கள் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை சரியாக நிரூபிக்காது சில வகையான தவறான செயலை அல்லது போலியான தீர்மானத்தை அதே வகையில் பேணுவதில் பிடிவாதமாக உள்ளார்கள்.

அரசாங்க அலுவலர்கள் பகைமையான உளப்பாங்குடன் பிடிவாதமாக இருப்பார்களாயின் நல்ல நிர்வாகத்தை ஒருபோதும் ஏற்படுத்த முடியாது என்பதுடன் உண்மையில் நிர்வாகத்தை மாசுபடுத்துவதாகவும் இருக்கும். மேலும் அரசாங்க அலுவலர்கள் நியாயமான முறைப்பாடுகளை பெறுவதற்கு தயாராக இல்லாததும் அவற்றை கொண்டுவரும் பிரச்சனைகளை செவிமடுக்காது இருப்பதுடன் அவர்களை தூரத்தில் வைத்து பேணுதல் நெருங்கிய சம்பந்தமில்லாது நடாத்துதல் என்பன நல்ல நிர்வாகத்தை வேறு வழியில் திருப்புவதற்கு ஏதுவாயுள்ளது.

மிகையான சட்ட பூர்வங்கள் மற்றும் முறைமைகள் மூலம் ஏற்படும் தாமதங்கள், நியாயமானதாகவும் நிர்வாக நேர்மையுடனும் தொழிற்பட தவறுதல் தவறான பொருள் கோடல் மற்றும் அரசாங்க கொள்கை நடைமுறைகள் ஒழுங்குகள் அத்துடன் விதிகள் என்பவற்றை தவறாக பயன்படுத்தல் அத்துடன் முறைப்பாட்டாளர்களுடன் முன்னரே நியாயமான இணக்கத்தைப் பெற்றிருக்க கூடிய பிரச்சனைகளை சந்தித்து இனங்காணுவதில் தயக்கம், மறுப்பு, மனக்குறைகளை செவிமடுக்காது ஒரு பக்கச்சார்பாக ஆதரவளித்தல். உணர்ச்சியற்ற நிலை, சிரத்தையின்மை போன்றவற்றால் சிறிய பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் முடிவு காணமுடியாதளவு தாமதங்களை ஏற்படுத்தல் என்பன போன்ற அலுவலர்களின் மற்றும் அதிகாரிகளின் செயற்பாடானது பொது நபரொருவரை முறையிடுவதற்கு தூண்டுகிறது. திணைக்களங்கள் அல்லது அதிகாரிகள் தாமதமான அமுல்படுத்தல் என்ற தீர்மானத்துடன் உடன்படுதல் பொதுவான நடைமுறையாகவுள்ளது.

அரசியலமைப்பின் ஏற்பாடுகளில் உள்ள மாற்றங்கள் தொடர்பிலான எனது கருத்துக்களை சமர்ப்பிக்குமாறு முன்னர் அறிவுறுத்தப்பட்டிருந்தேன், இவ்வலுவலகத்தின் தொழிற்தரம், செயற்பாடுகளின் வழிமுறைகளையும் உபாயங்களையும் கருத்தில் கொண்டு எமது சமுதாயத்தின் குறைந்தளவில் சலுகைகளை பெறும் மக்களுக்கான சிறந்த சேவையை வழங்கும் கொள்கைகளையும் உப குழுவிற்கு சமர்ப்பித்தேன். ஆயினும் உறுப்பினர்கள் பரிந்துரைகளை விவாதித்து எனது விசாரணையில் இரு குழுக்களுக்கிடையான விசாரணைகளை மேற்கொள்ளாமை தொடர்பில் சுட்டி காட்டி ஏற்றுக்கொள்ள மறுத்தமை கவலைக்குரிய விடயமாகும். இத்தகைய கருத்துக்களில் நான் கவலைகொள்ளவேண்டிய அவசியமில்லையாயினும் இச்சட்டத்தின் ஏற்புடைய ஏற்பாடுகள் மற்றும் விசாரணையின் அர்த்தத்தையும் அவதானிக்கிறேன். இவ்வலுவலகமானது தமது பிரச்சனைகளை முன்வைப்பதற்கான நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திகொடுப்பதுடன் எக்குழுவினருக்கும் சட்ட நிபுணர்களை இவ்விடயத்தில் உட்படுத்துவதற்கு இடமளிக்காது என்பதுடன் இந்நிறுவனம் அதிகார வர்க்க ஆட்சி முறைக்கு இடமளிக்காது.

அலுவலகமானது, பெறப்பட்ட எண்ணிக்கையிலான முறைப்பாடுகளின் விபரங்களை ஒழுங்குபடுத்தி நிர்வாகித்துள்ளது. அலுவலகத்தின் பதவியணிகள் இன்னமும் நிரப்பப்படவில்லை. அலுவலகத்தில் கணக்காளர் அல்லது கணக்குப்பதியுனர் நியமிக்கப்படவில்லை. அலுவலகத்தில் சேவை புரிவதற்கு அலுவலர்கள் தயக்கம காட்டுவது அவதானிக்கப்பட்டுள்ளது. போதியளவு மேலதிக நேர கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அல்லது அலுவலர்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஏனைய முன்தேவைகளை பெறுவதற்கும் சந்தர்ப்பமின்மையே காரணமாக இருக்கலாம்.

அட்டவணை 1 புள்ளிவிபர பகுப்பாய்வு			
2016 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட புலனாய்வு செய்யப்பட வேண்டிய முறைப்பாடுகளின் மீதி		457	
2017.01.01 ஆம் திகதியிலிருந்து 2017.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பெறப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த தொகை			
அ. முறைப்பாட்டாளர்களிடமிருந்து நேரடியாகப் பெற்றது	1310		
ஆ. பொது மனுக்கள் குழுவினால் புலனாய்வுக்காகவும் அறிக்கைக்காகவும் அனுகப்பட்டது	70	1380	
2016 ஆம் ஆண்டில் புலனாய்வு செய்யப்பட வேண்டிய முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை			1837
2016 ஆம் ஆண்டில் புலனாய்வு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை			
அ. நிவாரணம் வழங்க கூடிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை			
1. விசாரணையின்றி தீர்வு வழங்கப்பட்டது	69		
2. பொருத்தமான செயற்பாட்டுக்கு ஏற்புடைய அதிகாரியை அணுகல்	47		
3. சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் அனுகப்பட்ட அறிக்கையின் பின்னர் விலக்கப்பட்ட முறைப்பாடுகள்	318		
4. அறிக்கை கோரப்பட்ட பின்னர் கோரிக்கை நிறைவேற்றப்பட்ட முறைப்பாடுகள்	103		
ஆ. சுருக்கமாக முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகள்			
1. சம்மான நிலையில் உள்ள நியாயசபை நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட அதே முறையீடு என்பதால் புலனாய்வு செய்யாது நிராகரிக்கப்பட்டது	127		
2. விசாரணை மேற்கொள்வதற்கு போதுமான தகவல் கிடைக்கப்பெறாமை	14		
3. நிவாரணம் வழங்கக் கூடிய வழக்கு அல்லாதவை	43		
4. ஒம்புடஸ்மனின் சட்ட நியாயாதிக்கத்திற்கு அப்பாற்பட்டவை	75		
5. முறைப்பாடு செய்வதில் மேலதிக தாமதம்	61		
6. ஏனைய நிறுவனங்களுக்கு முறைபாடுகளை அனுப்பிவிட்டு இந்நிறுவனத்திற்கு பிரதிகளாக அனுப்பப்பட்ட முறைப்பாடுகள்	315		
7. ஏனைய ஒம்புட்ஸ்மனுக்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகள்	25	1197	
ஆ. கட்சிகள் முன்னிலையிலான விசாரணையின் பின்னர் புலனாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகளின்மொத்த எண்ணிக்கை		24	1221
2017.12.31 ஆம் திகதியன்று புலனாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டிய முறைப்பாடுகளின் மிகுதி			616

மாதாந்த பகுப்பாய்வு

2016 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மிகுதி முறைப்பாடுகளுடன் 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைபாடுகளுமாக மொத்தமாக பெறப்பட்ட முறைப்பாடுகள் 1380 ஆகும். 2017 ஆண்டு .ஏப்பிரல் மாதம் மிக குறைந்த எண்ணிக்கயிலான 75 முறைபாடுகள் பெறப்பட்டுள்ளன. மிகவும் அதிகமான எண்ணிக்கையிலான 162 .முறைப்பாடுகள் மார்ச் மாதம் பெறப்பட்டுள்ளன.

அட்டவணை 2

	மாதம்	மொத்தம்
1.	ஜனவரி	130
2.	பெப்ரவரி	100
3.	மார்ச்	122
4.	ஏப்பிரல்	75
5.	மே	104
6.	யூன்	87
7.	யூலை	126
8.	ஓகஸ்ட்	98
9.	செப்டெம்பர்	100
10.	ஒக்டோபர்	162
11.	நவம்வர்	124
12	டிசெம்பர்	152
	மொத்தம்	**1380**


152
130
100
124
122
162
75
104
100
87
98
126
ஜனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்பிரல்
மே
யூன்
யூலை
ஓகஸ்ட்
செப்படம்பர்
ஒக்டோபர்
நவம்வர்
டிசெம்பர்

தாக்கல் செய்யப்பட்ட மொத்த முறைப்பாடுகளில் ஆண்கள் 1027 ஆகவும் பெண்கள் 353 ஆகவும் உள்ளன.

அட்டவணை 3

2017 ஆம் ஆண்டில் கிடைத்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை பால் அடிப்படையில் வகைப்படுத்தல்

மாதம்	ஆண்	பெண்	மொத்தம்
ஜனவரி	103	27	130
பெப்ரவரி	77	23	100
மார்ச்	88	34	122
ஏப்பிரல்	60	15	75
மே	74	30	104
யூன்	71	16	87
யூலை	91	35	126
ஓகஸ்ட்	69	29	98
செப்டெம்பர்	69	31	100
ஒக்டோபர்	119	43	162
நவம்பர்	93	31	124
டிசெம்பர்	113	39	152
மொத்தம்	**1027**	**353**	**1380**

மாவட்டப் பகுப்பாய்வு

2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகளில் பெரும்பாலன எண்ணிக்கையில் கொழும்பு மாவட்டத்தில் (164), அடுத்து காலி மாவட்டத்திலிருந்து (142) அத்துடன் கண்டி மாவட்டத்தில் (123) முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன.

அட்டவணை 4.

மாவட்டம்	முறைபாட்டாளர்களின் எண்ணிக்கை 2017
கொழும்பு	164
கம்பகா	93
களுத்துறை	88
கண்டி	123
மாத்தளை	40
நுவரேலியா	31
காலி	142
மாத்தறை	101
ஹம்பாந்தோட்டை	51
யாழ்ப்பாணம்	14
மன்னார்	02
வவுனியா	05
முல்லைத்தீவு	02
கிளிநொச்சி	03
மட்டகளப்பு	31
அம்பாறை	36
திருகோணமலை	18
குருநாகல்	115
புத்தளம்	24
அநுராதபுரம்	63
பொலநறுவை	54
பதுளை	46
மொனறாகலை	16
இரத்தினபுரி	71
கேகாலை	46
வெளிநாடு	01
மொத்தம்	**1380**


முறைபாட்டாளர்களின் எண்ணிக்கை 2017
164
93
88
123
40
31
142
101
51
14
31
36
18
115
24
63
54
46
16
71
46
1
கொழும்பு
கம்பகா
களுத்துறை
கண்டி
மாத்தளை
நுவரேலியா
காலி
மாத்தறை
ஹம்பாந்தோட்டை
யாழ்ப்பாணம்
மன்னார்
வவுனியா
முல்லைத்தீவு
கிளிநொச்சி
மட்டகளப்பு
அம்பாறை
திருகோணமலை
குருநாகல்
புத்தளம்
அநுராதபுரம்
பொலநறுவை
பதுளை
மொனறாகலை
இரத்தினபுரி
கேகாலை
வெளிநாடு

விடய பகுப்பாய்வு

2017 ஆம் ஆண்டில் அலுவலக நியமனங்கள், பதவி உறுதிப்படுத்தல், தொழில் முடிவுறுத்தல், பதவியுயர்வுகள், சம்பள முரண்பாடுகள், சம்பள உயர்வுகள், நிலுவைகள்,பொலீஸ் அலுவலரினதும் அதேபோல் அரசாங்க அலுவலர்களினதும் அதிகார துஷ்பிரயோகம், செயல்புறக்கணிப்பு, ஓய்வூதியங்கள், ஊழியர் சேமலாப நிதிக்கொடுப்பனவுகள், அதிகாரமற்ற நிர்மாணங்கள், தொல்லைகள் என்பன தொடர்பான முறைப்பாடுகள் குறிப்பிடத்தகளவில் காணப்பட்டன.

விடயம் சார்பாக 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற அரசாங்க அலுவலர்களுக்கு எதிரான மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை

		2017
1	நியமனம்,பதவியில் உறுதிப்படுத்தல், முற்றேதியிடல்	134
2	தொழில் முடிவுறுத்தல், மீள அமர்த்தல், பதவி நீடிப்பு	118
3	பதவியுயர்வுகள், பதவி மூப்பு	71
4	காணி அனுமதிப்பத்திரம், அரச காணிகள் வழங்குதல்	99
5	தாமதிப்பு, தகுதியின்மை, அலட்சியம், தத்துவ துஷ்பிரயோகம்	126
6	சம்பள முரண்பாடுகள், சம்பள உயர்வுகள், நிலுவைகள் , படிகள்	101
7	ஓய்வூதியம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம்	96
8	நட்டஈடு, வறுமை, நிவாரணம், சமுர்த்தி	52
9	இடமாற்றம்	70
10	சுனாமி உதவிகள்	02
11	பல்கலைக்கழகம், பாடசாலை அனுமதி பரீட்சை பெறுபேறுகள்	96
12	ஊ.சே.நி, ஊ.ந.நி, மானியம்	24
13	அதிகாரம், செயல்புறக்கணிப்பு தொடர்பான பொலீஸ் துஷ்பிரயோகம்	19
14	அதிகாரமளிக்கப்படாத கட்டட நிர்மாணங்கள் தொல்லைகள்	50
15	கடன்கள் மீளளிப்புக்கள் மீள் அட்டவணைப்படுத்தல்	11
16	உரிமம் கட்டட அனுமதிப் பத்திரம்	37
17	மின்சாரம் நீர் தொலைத்தொடர்பு துண்டித்தல்	14
18	வேலைத்தளத்தில் துன்புறுத்தல்	37
19	வீதிகள்	42
20	பல்வேறு வகையானவை	181
	மொத்தம்	**1380**

அமைச்சு அரசாங்க நிறுவனங்களின் பகுப்பாய்வு

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு(263) கல்வி உயர் கல்வி அமைச்சு (218) ஆகியவற்றில் உள்ள அலுவலர்களுக்கு எதிரான முறைப்பாடுகளே மிகவும் அதிகமாக காணப்பட்டன. காணி அனுமதிப்பத்திரம் மற்றும் மானியங்கள் வழங்கல் தொடர்பாக பிரதேச செயலகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளே பெரும்பான்மையாக் காணப்பட்டன. ஏற்புடைய சட்டத்தில் சொத்துரிமை சட்டம் பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தும் உடமை குடியிருப்பு தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவது சிறிய விடயமல்ல. காணி அனுமதி, மானியங்கள் வழங்குவதல் போன்ற விடயங்களில் பிரதேசசெயலகங்களில் தொழில் புரியும் சில அலுவலர்கள் வெளிப்படையக நடந்து கொள்ளவில்லை.

அட்டவணை-6 2017 ஆம் ஆண்டில் அமைச்சுக்கள் திணைக்களங்கள் அதிகாரசபைகள் அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றில் பணிபுரியும் அலுலர்களுக்கு எதிராக முறைப்பாடுகளின் எண்ணிக்கை

அமைச்சு திணைக்களம் அதிகாரசபை	எண்ணிக்கை 2017
அரசாங்க நிர்வாகம்	263
கல்வி மற்றும் உயர்கல்வி	218
கூட்டுத்தாபனங்கள்/அதிகாரசபைகள் (CPC,CEB,SLAA,RDA)	63
அரசாங்கசேவை ஆணைக் குழு (மத்திய மற்றும் மாகாணம்)	36
பாதுகாப்பு மற்றும் உள்ளக பாதுகாப்பு	59
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை	208
போக்குவரத்து(SLCTB,CGR,CMV)	38
சுகாதார மற்றும் சுதேச மருத்துவம்	67
தொழில்	07
நிதி	17
விவசாயம்	29
அரச வங்கிகள்	19
ஓய்வூதியம்	74
நீதி	19
நீர்பாசனம் மற்றும் மகாவலி அதிகாரசபை	31
தபால் மற்றும் மின்சார அதிகார சபை	18
சமூகசேவை சமூத்தி ரொப்பியா(REPPIA)	08
காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு	37
கூட்டுறவு அபிவிருத்தி	14
தேசிய நீர் விநியோகம் மற்றும் வடிகால் அமைப்புச் சபை	07
பதிவாளர் நாயகம்	04
காடுகள்	08
பெருந்தோட்டங்கள்	03
ஏனையவை	133
மொத்தம்	**1380**

அலுவலகப் பதவியணியிநர்கள்

இவ்வலுவலகம் 32 பதவியணியிநர்களை அங்கீகரித்துள்ளது. ஆயினும் நிறுவன அமைப்பு வரைபடம் காட்டுவது போல் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இவ்வலுவலகத்தில் 20 அலுவலர்கள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளனர். (வரைபடத்தை பார்க்கவும்)

நிறுவன அமைப்பு வரைபடம்

ஒம்பூட்ஸ்மன்

நிர்வாக அலுவலர்(தாபனம்) -01

நிர்வாக அலுவலர்(மனு)- வெற்றிடம்-01

மொழிபெயர்பாளர் வகுப்பு -1 (சிங்களம்/ஆங்கிலம்)-01

மொழிபெயர்பாளர் வகுப்பு -1 (தமிழ்/ஆங்கிலம்)-01

(வகுப்பு 1 அமுஉசே- 01

(வகுப்பு 11 அமுஉசே)-01

(வகுப்பு 111 அமுஉசே)-02

(அமுஉசே) (வெற்றிடம்)-01

த.தொ.உ (வெற்றிடம்) - 01

சாரதி (வெற்றிடம்) -02

(வகுப்பு 1 அமுஉசே)01

(வகுப்பு 111 அமுஉசே)-06

(அமுஉசே)(வெற்றிடம்)-05

அலுவலகப் பணியாளர் (வகுப்பு11) -02

அலுவலகப் பணியாளர் (வகுப்பு111)-03

அலுவலகப் பணியாளர் (வகுப்பு111) (வெற்றிடம்)- 01

சுகாதார பணியாளர் (ஒப்பந்தம்)-01

வருடாந்த வரவு செலவு திட்டம்

மீண்டெழும் செலவீனங்களுக்காக ரூபா 24,676,000.00 தொகையும் மூலதனச செலவாக ரூபா 1,474,000.00 தொகையுமாக 2017 ஆம் ஆண்டிற்கான மொத்த தொகை ரூபா 26,150,000.00 ஆகும். இவ்வருடத்திற்கான உண்மைச்செலவீனமானது ரூபா 24,351,000.00 தொகையும், சேமிப்பு ரூபா 1,799,000.00 தொகையுமாகும்.

தலைப்பு22 - நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

01- நடைமுறை செயற்பாடுகள்

01 -பொது நிர்வாகமும் தாபன சேவைகளும்

பொருள்	விவரணம்	2017 தேறிய ஏற்பாடு	2017 செலவீனம்
	மீண்டெழும் செலவீனம்	**24676**	**22922**
	தனிநபர் வேதனாதிகள்	**9478**	**9444**
1001	சம்பளங்கள் கூலிகள்	6040	6011
1002	மேலதிக வேலை நேரம் விடுமுறை கொடுப்பனவுகள்	66	66
1003	ஏனைய படிகள்	3372	3367
	பிரயாண செலவுகள்	**711**	**681**
1101	உள்நாடு	22	21
1102	வெளிநாடு	689	660
	விநியோகங்கள்	**695**	**689**
1201	காகிதாதிகள் அலுவலக உபகரணங்கள்	455	454
1202	எரிபொருள்	230	227
1203	உணவும் சிற்றுண்டி சீருடை	10	08
	பராமரிப்பு செலவு	**1002**	**887**
1301	வாகனங்கள்	467	467

1302	பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்	100	95
1303	கட்டடம் மற்றும் நிர்மாணங்கள்	435	325
	ஒப்பந்தம்	**12293**	**10733**
1401	போக்குவரத்து	120	119
1402	தபால் தொலைத் தொடர்பு	550	545
1403	மின்சாரம் மற்றும் நீர்	597	597
1404	வாடகை மற்றும் உள்ளூர் வரிகள்	10706	9197
1405	ஏனையவை	320	275
	இடமாற்றம்	**434**	**425**
1505	சந்தா மற்றும் பங்களிப்பு நிதி	338	335
1506	சொத்துக்கள் மீதான கடன்களுக்கான வட்டி	96	90
	ஏனைய நானாவித செலவுகள்	**63**	**63**
1701	நட்டங்கள் மற்றும் கழித்தல்கள்	63	63
	மூலதன செலவு	**1474**	**1429**
	மூலதனம் சொத்து கொள்ளல்	**1424**	**1424**
2102	தளபாடங்கள் மற்றும் அலுலவக உபகரணம்	1424	1424
	கட்டியெழுப்பும் இயலளவு	50	05
2401	பயிற்சி மற்றும் கட்டியெழுப்பும் இயலளவு	50	05
	மொத்த செலவீனம	**26150**	**24351**
	மொத்த நிதி	**26150**	**24351**
	நிதியிடல் உள்நாடு	26150	24351

(எல். ஏ. திஸ்ஸ ஏக்கநாயக்க)

நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர்

(ஒம்புட்ஸ்மன்)